அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2013

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.**

(5 புள்ளிகள்)

1. எலுமிச்சங்காய் = ________________ + _________________
2. ஆறாயிரம் = ________________ + _________________
3. மனமுவந்து = ________________ + _________________
4. தமிழிலக்கியம் = ________________ + _________________
5. முத்தமிழ் = ________________ + _________________

| புள்ளிகள் | |
|---|---|

**(ஆ) கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** (5 புள்ளிகள்)

1. பௌர்ணமி ………………………………
2. சிறுபான்மை ………………………………
3. விருப்பு ………………………………
4. கொடுத்தல் ………………………………
5. இன்சொல் ………………………………

| புள்ளிகள் | |
|---|---|

**(இ) கீழே தரப்பட்ட வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.**

(10 புள்ளிகள்)

1. பெற்றோர்களும் ஆசிரியர்களும் ________________ செயல்பட்டால் மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும்.

2. கணனித் துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு நல்ல ________________ கிடைக்கும்.

3. நற் செயல் புரிந்த தம் மாணவனை ஆசிரியர் ________________.

4. சத்துள்ள பழங்களையும் காய்கறிகளையும் அன்றாடம் நாம் உண்டு வந்தால் ________________ இன்றி நீண்டகாலம் வாழலாம்.

5. யோகப் பயிற்சிகள் உடலையும் ________________ உறுதியாக வைத்திருக்க உதவுகின்றன.

6. எந்த ஒரு நாடும் தன் உள்விவகாரங்களில் பிறநாடு ________________ விரும்புவதில்லை.

7. வீட்டுக்கு வருபவர்களை அன்புடன் ________________ வேண்டும்.

8. தாய் தன் குழந்தையைக் கண்ணின் இமை போல் ____________ வந்தாள்.

9. பயன் ஏதும் ________________ பிறருக்குச் செய்யும் உதவியே மிகவும் சிறந்தது.

10. அவுஸ்திரேலியாவில் முதியவர்களைப் ________________ பல இல்லங்கள் உள்ளன.

| புள்ளிகள் | |
|---|---|

**(ஈ) பின்வரும் ஒவ்வொரு செல்லையும் கொண்டு அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைத்து எழுதுக.** (20 புள்ளிகள்)

1. மனம் ……………………………………………………………

……………………………………………………………..

2. மணம் ……………………………………………………………

……………………………………………………………..

3. மலை ……………………………………………………………

……………………………………………………………..

4. மழை ……………………………………………………………

……………………………………………………………..

5. தோல் ……………………………………………………………

……………………………………………………………..

6. தோள் ……………………………………………………………

……………………………………………………………..

7. திரை ……………………………………………………………

……………………………………………………………..

8. திறை ……………………………………………………………

……………………………………………………………..

9. ஒலி ……………………………………………………………

……………………………………………………………..

10. ஒளி ……………………………………………………………

……………………………………………………………..

| புள்ளிகள் | |
|---|---|

**(உ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஓத்த கருத்துள்ள சொல்லை அடிக்கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. கபிலர் தம்மை ஆதரித்த பாரி வள்ளலைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடியுள்ளார்.

    1. வாழ்த்திய 2. பேணிய
    3. மதித்த 4. ஊக்குவித்த

2. வரவு அறிந்து செலவு செய்யாதார் வாழ்க்கையில் இடர்ப்படுவர்.

    1. கடன்படுவர் 2. துன்பப்படுவர்
    3. அவமானப்படுவர் 4. கவலைப்படுவர்

3. மக்களுக்குச் சேவை செய்தோரை எல்லோரும் போற்றினர்.

    1. வாழ்த்தினர் 2. தூற்றினர்
    3. வேண்டினர் 4. வரவேற்றனர்

4. உற்ற நண்பர்களிடையேயும் அவ்வப்போது முரண்பாடு ஏற்படுவது இயல்பு.

    1. மனவருத்தம் 2. கருத்துவேற்றுமை
    3. சண்டைசச்சரவு 4. வாக்குவாதம்

5. நல்ல நூல்களைப் படிப்பவர்களின் சிந்தனையில் நல்லெண்ணங்களே அரும்பும்.

    1. பதியும் 2. விளையும்
    3. வளரும் 4. தோன்றும்

6. காளமேகப் புலவர் கவிதை எழுதுவதிலும் நகைச்சுவையாகப் பேசுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

1. ஆற்றலுடையவராக
2. செல்வாக்குடையவராக
3. புகழுடையவாராக
4. பெருமையுடையவராக

7. பெற்றோர்கள் தம் பிள்ளைகள் செய்யும் பிழைகளை நயமாக எடுத்துக்கூறித் திருத்த வேண்டும்.

1. இனிமையாக
2. புரியும்படியாக
3. பக்குவமாக
4. திறமையாக

8. மக்கள் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத பெருட்களுள் தலையாயது தூய்மையான காற்றே ஆகும்.

1. முதன்மையானது
2. அடிப்படையானது
3. அவசியமானது
4. தேவையானது

9. விலையுயர்ந்த வலம்புரிச் சங்குகள் கடலில் எப்போதாவதுதான் அரிதாகக் கிடைக்கும்.

1. குறைவாக
2. அபூர்வமாக
3. சிறிதாக
4. அதிசயமாக

10. உலகம் முழுவதும் உள்ள எழில் நிறைந்த இடங்கள் சுற்றுப் பயணிகளை ஈர்க்கின்றன.

1. வளம்
2. அழகு
3. கவர்ச்சி
4. இயற்கை

| புள்ளிகள் | |
|---|---|

# பகுதி II

**(ஊ) பின்வரும் கட்டுரைப் பகுதியை கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதுக:**

(20 புள்ளிகள்)

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார். ஒப்பற்ற கவிஞரான அவரைத் தமிழ் மக்கள் பாரதியார் என்றே அழைத்து வருகின்றனர். உலகம் முழுவதும் உள்ள தமிழர் அனைவரும் அவரை நன்கு அறிவர். உலகத்தில் உள்ள பல மொழிகளிலும் தமிழ் மொழியே மிகச் சிறந்தது என்று அவர் கூறுகின்றார். இவ்வாறு கூறுவதற்கு அவர் மிகவும் தகுதி உடையவர் ஆவார். அவர் பல மொழிகளைக் கற்று அறிந்த ஒரு பன்மொழியறிஞர். அவர் ஆங்கிலம், சமஸ்கிருதம், வங்காளம், இந்தி ஆகிய பல மொழிகளில் பேசவும் எழுதவும் வல்லமை பெற்றவர். அவர் பல மொழிகளில் உள்ள இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றவர். அவர் தமிழ் மொழியில் பெற்ற இன்பத்தைப் போன்று வேறு எந்த மொழியிலும் தம்மால் பெற முடியவில்லை என்று கூறுகின்றார்.

தமிழ் நூல்களுள் மிகவும் சிறந்தனவாக அவருக்குத் தோன்றியவை கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவை. ஆதலால், அவற்றை உலக மக்களின் உயரிய வாழ்வினுக்குக் கொடுத்துச் சென்ற புலவர்களாகிய கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகியோரை அவர் போற்றத் தவறவில்லை. தமிழர்கள் ஒவ்வொருவரும் இந்த நூல்களின் சிறப்பை உலக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பமாகும். அதனால்தான் தெருவெல்லாம் தமிழோசை நிரம்பி வழிய வேண்டும் என்று அவர் முழங்கினார்.

சிறப்புமிக்க நூல்களை வழங்கிய சான்றோர்களாகிய கம்பரையும் திருவள்ளுவரையும் இளங்கோவடிகளையும் நமக்கு அளித்த தமிழ் நாட்டை நாம் போற்ற வேண்டும் என்றும் தமிழையும் நாம் போற்றிப் பாராட்ட வேண்டும் என்றும் பாரதியார் விரும்பினார். மேலும் அவர் உலகிலுள்ள பன்மொழிச் சொற்கள் பலவற்றுள்ளும் தமிழ்ச் சொல்லே உயர்ந்தது என்றும் கூறினார். தமிழைத் தொழுது படித்துப் பயன் பெற வேண்டும் என்றும் கூறிச் சென்றார்.

தமிழைப் படித்துவிட்டுப் பழம் பெருமை மாத்திரம் பேசினால் போதாது; வளர்ந்து வரும் உலகிற்கு ஏற்பப் பல சிறப்புக்கள் தமிழில் தோன்ற வேண்டும் என்பது அவருடைய விருப்பம். இத்தகைய முற்போக்கு எண்ணம் கொண்ட பாரதியார் அதற்குரிய வழியையும் காட்டத் தவறவில்லை. பழங்கால இலக்கியங்களுக்கு ஈடான புதிய நூல்கள் தமிழில் இயற்றப்பட வேண்டும் என்றார் அவர். மேலும் பிற நாடுகளில் உள்ள சிறப்புகளைக் கொண்டுவந்து தமிழில் சேர்க்கவேண்டும்; அதற்காகத் தமிழர் எட்டுத்திக்கும் செல்ல வேண்டும்; கடல் கடக்கவும் துணிய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றார். மற்ற நாட்டு அறிஞர்கள் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழை உலக அரங்கில் உயர்த்த வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்.

பாரதியார் கண்ட பல கனவுகளில் ஒன்று தமிழ்மொழி என்றும் அழியாமல் இவ்வுலகில் வாழும் மொழியாக இருக்க வேண்டும் என்பது. அவர் கண்ட கனவு நனவாக வேண்டுமானால் தமிழர்கள் தங்கள் தமிழ்மொழியை வாழ வைக்க வேண்டும். அதற்குத் தமிழர்கள் என்றும் உறுதுணையாய் இருந்து அவரின் கனவை நனவாக்க வேண்டும்.

1. உலகில் தமிழ் மொழியே சிறந்தது என்று பாரதியாரால் எவ்வாறு கூறமுடிந்தது?

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

2. சிறந்த தமிழ் இலக்கியப் படைப்பாளரைப் பாரதியார் பாராட்டுவது ஏன்?

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

3. பாரதியார் ஏன் தெருவெல்லாம் தமிழோசை நிரம்பி வழிய வேண்டும் என்று விரும்பினார்?

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

4. பழம் பெருமை பேசுவோரிடம் பாரதியார் காணும் குறைபாடு யாது?

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

5. தமிழ் மொழி குறித்துப் பாரதியார் கண்ட கனவு எப்போது நனவாகும்?

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

| புள்ளிகள் | |
|---|---|

**(எ) கீழே தரப்பட்டுள்ளவற்றில் ஒரு தலையங்கத்தைத் தேர்ந்தெடுத்து 200 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை அல்லது கடிதம் எழுதுக.** (30 புள்ளிகள்)

1. நீங்கள் கல்வியில் சிறந்து விளங்க உங்கள் குடும்பத்தினா் எவ்வாறெல்லாம் உங்களுக்கு உதவலாம் என விளக்குக.

2. அண்மையில் உங்கள் குடும்பத்தினா் புதுவீடு ஒன்றில் குடியேறியுள்ளனா். இதையொட்டி ஏற்பாடு செய்திருக்கும் விருந்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்து உங்கள் தோழனுக்கு அல்லது தோழிக்கு ஒரு கடிதம் எழுதுக.

3. நீங்கள் அண்மையில் மேற்கொண்ட சுற்றுலாவின்போது உங்களுக்கு மனவருத்தம் ஏற்படக் காரணமாய் இருந்த ஒரு நிகழ்ச்சியை விளக்குக.

4. உம்மைக் கவா்ந்த ஒருவரைப் பற்றியும் அவரிடம் நீா் காணும் சிறந்த பண்புகள் பற்றியும் விளக்கி எழுதுக.

5. அண்மையில் நீா் பாா்த்த கலாசார நிகழ்ச்சி ஒன்று பற்றி நினைத்துப் பாா்க்கவும். அந்த நிகழ்வு எந்தெந்த வகையில் தன் நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது? எந்தெந்த வகையில் தன் நோக்கத்தை நிறைவேற்ற மேலும் கவனம் செலுத்த வேண்டும் என்பது பற்றி மதிப்பீட்டுக் கட்டுரை எழுதுக.

| புள்ளிகள் | |
|---|---|